**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 30.05.2018–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு சாதாரணக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் **: 29.05.2018** இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

(1) சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டம் 2017–18–இல் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 7 நெசவாளர் காலனியிலுள்ள சமுதாயக் கூடத்திற்கு கூடுதல் கட்டிடம் கட்டி இதரப் பணிகள் `. 9.90 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 23.5.2018 அன்று 3–ஆம் அழைப்பு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. அவற்றின் விவரம் வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் விலாசம் | மதிப்பீடு (` . லட்சத்தில்) | மதிப்பீட்டைவிட | |
|---|---|---|---|---|
| | | | குறைவு | அதிகம் |
| 1 | திரு ஆர். மாணிக்கம், ஒப்பந்ததாரர், இராசிபுரம் | ` . 9.90 | 0.01 % | – |
| 2 | திரு ஜே. ரவிச்சந்திரன், ஒப்பந்ததாரர், கவுண்டம்பாளையம் | | – | 0.38 % |

பெறப்பட்ட 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.01 % குறைவாக அளித்துள்ள திரு ஆர். மாணிக்கம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/246/18)

**தீர்மானம் எண். 312**

அனுமதிக்கப்பட்டது

(2) இந்நகராட்சிக்குச் சொந்தமான தட்டான்குட்டை உரக்கிடங்கில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ள ஏதுவாக குவிந்துள்ள குப்பைகளை அகற்ற `. 17.50 லட்ச மதிப்பீட்டிற்கு 11.5.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் விலாசம் | மதிப்பீடு (` . லட்சத்தில்) | மதிப்பீட்டைவிட | |
|---|---|---|---|---|
| | | | குறைவு | அதிகம் |
| 1 | M/s. Namakkal Constructions, No. 45, Ramasamy Arcade, Namakkal. | ` . 17.50 | – | 0.20 % |
| 2 | M/s. Mano Constructions, 6/591-H, Sellandiyamman Koil Street, Namakkal. | | 0.02 % | – |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.02 % குறைவாக அளித்துள்ள M/s. Mano Constructions, Namakkal அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/848/18)

**தீர்மானம் எண். 313**

அனுமதிக்கப்பட்டது

(3) இந்நகராட்சிக்கு தூய்மை பாரத திட்டத்தில் தட்டான்குட்டை உரக்கிடங்கில் `. 99.25 லட்சம் மதிப்பீட்டில் திடக்கழிவு மேலாண்மையில் உள்கட்டமைப்புப் பணிகள் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 11088/16–17/பி3 நாள் 24.5.17–இல் நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டது. இந்நிலையில் Micro Compost Centre (5 மெட்ரிக் டன் கொள்ளளவு) அமைக்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் அறிவுரை வழங்கப்பட்டதன்பேரில் ஏற்கனவே நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகையான `. 99.25 லட்சம் மதிப்பீட்டில் 5 MT கொள்ளளவு கொண்ட இரண்டு Micro Compost Centre அமைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/1308/16)

**தீர்மானம் எண். 314**

அனுமதிக்கப்பட்டது

(4) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 11, வெங்கிடசாமி தெரு, காவேட்டி சந்தில் புதிய தொட்டி அமைத்து தண்ணீர் வசதி செய்யும் `. 1.00 லட்சம் மதிப்பீட்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிக்கு 23.05.2018–இல் பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.13% குறைவு.
2) திரு ஜே. ரவிச்சந்திரன், ஒப்பந்ததாரர், கவுண்டம்பாளையம் – மதிப்பீட்டைவிட 0.87% அதிகம்.

மதிப்பீட்டைவிட 0.13 % குறைவான திரு என். செல்லப்பன் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மதிப்பீட்டினைவிட 0.13 % குறைவான திரு என். செல்லப்பன் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/246/18)

**தீர்மானம் எண். 315**

அனுமதிக்கப்பட்டது

(5) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 25, முல்லா சாகிப் தோட்டத்தில் புதிய ஆழ்துளைக் கிணறு அமைத்து தண்ணீர் வசதி செய்யும் `. 4.00 லட்சம் மதிப்பீட்டு சட்டமன்ற உறுப்பினர்

தொகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிக்கு 23.05.2018–இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.07% குறைவு.
2) திரு ஜே. ரவிச்சந்திரன், ஒப்பந்ததாரர், கவுண்டம்பாளையம் – மதிப்பீட்டைவிட 1.12% அதிகம்.

மதிப்பீட்டைவிட 0.07% குறைவான திரு என். செல்லப்பன் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மதிப்பீட்டினைவிட 0.07% குறைவான திரு என். செல்லப்பன் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/246/18)

**தீர்மானம் எண். 316**

அனுமதிக்கப்பட்டது

(6) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 1, குமாரசாமி தெரு ஆழ்துளைக் கிணறு தரைமட்டத்துடன் உள்ளதால், அதன் மேற்பகுதி வாகன போக்குவரத்தால் உடைந்துவிட்டது. அதனை சரிசெய்து தண்ணீர் வசதி செய்ய ஆகும் உத்தேச செலவினம் `. 30000/– மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/1041/18)

**தீர்மானம் எண். 317**

அனுமதிக்கப்பட்டது

(7) இராசிபுரம் நகராட்சிக்கு எடப்பாடி–இராசிபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் பெறப்படும் குடிநீரில், பாதுகாப்பான குடிநீர் பொதுமக்களுக்கு சோடியம் ஹைபோ குளோரைடு (Sodium Hypo Chloride) திரவம் கலந்து விநியோகம் செய்ய ஓராண்டிற்கு `. 800000/– (ரூபாய் எட்டு இலட்சம்) செலவாகும். மேற்காணும் செலவினத்திற்கு மன்ற அனுமதியும், செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், குடிநீர் விநியோகப் பணிகளின் அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : அ) `. 800000/– செலவினத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
இ) குடிநீர் விநியோகத்தின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/999/18)

**தீர்மானம் எண். 318**

அனுமதிக்கப்பட்டது

(8) அரசாணை (நிலை) எண். 39 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (குவ2) துறை நாள் 17.04.2018–இல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் குடிநீர் பெறும் உள்ளாட்சி அமைப்புகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய குடிநீர் கட்டணத்தை கீழ்க்கண்டுள்ளவாறு உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

**<u>ஏற்கனவே உள்ள விகிதம்</u>** **<u>01.12.2017 முதல் உயர்த்தப்பட்ட விகிதம்</u>**

நகர்ப்புற உள்ளாட்சி
அமைப்புகள் `. 4.50/1000 லிட்டர். `. 9.00/1000 லிட்டர்.

மேலும் ஒவ்வொரு நிதியாண்டிற்கும் 5 சதவீதம் உயர்த்தி செலுத்தவும் ஆணையிடப்பட்டுள்ளது. அரசாணை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(இ2/1146/18)

**தீர்மானம் எண். 319**

அனுமதிக்கப்பட்டது

(9) தமிழ்நாடு அரசிதழ் எண். 758 28.12.1998 (அசாதாரணம்)–இல் வெளியிடப்பட்டுள்ள பகுதி III–இல் குறிப்பிடப்பட்டுள்ள 1920–ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் திருத்திய சட்டம் அத்தியாயம் VI A–இல் நிர்ணயிக்கப்பட்டுள்ள விகிதங்களின்படி 1.10.98 முதல் தொழில்வரி வணிகம் (Trade) தனியார் அரசு அங்கீகாரம் மற்றும் அரசு அலுவலகங்களில் பணிபுரியும் பணியாளர்கள் (Ceiling and Employment) ஆகிய இனங்களுக்கு தொழில்வரி விதிகள் 1999 பிரிவு 13–இன்படி ஒவ்வொரு 5 வருடம் முடிந்ததும் நகர்மன்றம் மேற்படி வரிவிதிப்பில் 25 சதவிகிதத்திற்கு குறையாமலும், 35 சதவிகிதத்திற்கு மிகாமலும், `. 2500/–க்கு மிகாமலும், தொழில்வரி திருத்தம் செய்து நிர்ணயம் செய்யப்பட வேண்டும். அதன்படி 2013–14–ஆம் இரண்டாம் அரையாண்டு முதல் நகர்மன்ற தீர்மானம் எண். 664 நாள் 27.11.2013–இன்படி கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டு தொழில்வரி வசூலிக்கப்பட்டு வருகிறது. தற்போது 30.09.2018 உடன் ஐந்தாண்டுகள் முடிவடைவதால் ஏற்கனவே நடைமுறையிலுள்ள தொழில்வரியில் 25 சதவிகிதத்திற்கு குறையாமலும், 35 சதவிகிதத்திற்கு மிகாமலும், `. 2500/–க்கு மிகாமலும் நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்.** | **சராசரி அரையாண்டு வருமானம் (Gross)** | **தற்போது அமுலில் உள்ள அரையாண்டு தொழில் வரி** |
|---|---|---|
| 1 | `. 21000/– வரை | இல்லை |
| 2 | `. 21001/– முதல் `. 30000/– வரை | `. 123/– |
| 3 | `. 30001/– முதல் `. 45000/– வரை | `. 305/– |
| 4 | `. 45001/– முதல் `. 60000/– வரை | `. 610/– |
| 5 | `. 60001/– முதல் `. 75000/– வரை | `. 914/– |
| 6 | `. 75001/–க்கு மேல். | `. 1219/– |

**அலுவலகக் குறிப்பு** : அரசாணையின்படி சராசரி அரை வருட வருமானத்தின் அடிப்படையில் ஏற்கனவே அமுலில் உள்ள தொழில்வரியில் 25 சதவிகிதத்திற்கு குறையாமலும், 35 சதவிகிதத்திற்கு மிகாமலும், `. 2500/–க்கு மிகாமலும், அதை 1.10.2018 முதல் அமுல்படுத்தவும், இதன் விவரத்தை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(அ1/1138/18)

**தீர்மானம் எண். 320**

தற்போது அமுலில் உள்ள தொழில்வரியில் 25 % உயர்வு செய்யவும் நாளிதழ் மற்றும் இதர செலவினங்களுக்கு அனுமதி அளிக்கவும் தீர்மானிக்கப்பட்டது

( 10 ) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் குப்பைகள் (அ, ஆ) சேகரம் செய்ய உள்ள டம்பர் பிளேசர் வாகனத்திலுள்ள டம்பர் பின்கள் அனைத்தும் பழுதடைந்து குப்பைகள் சேகரம் செய்ய முடியாமலுள்ளதால் அ, ஆ ஆகிய பிரிவுகளுக்கு தலா 10 வீதம் மொத்தம் 20 டம்பர் பின்கள் கொள்முதல் செய்ய ஏற்படும் உத்தேச செலவினம் `. 1300000/–ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : 1)** மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதியும், பொது சுகாதாரப் பணிகள் பாதிப்படையாமல் இருக்கவும், டம்பர் பின்கள் கூட்டுறவு நிறுவனமான சேலம் மாவட்ட சர்வோதயா சங்கம், தாண்டவராயபுரம், ஆத்தூர் அவர்களிடம் நேரடியாக கொள்முதல் செய்யவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/1076/18)

**தீர்மானம் எண். 321**

அனுமதிக்கப்பட்டது

( 11 ) இந்நகராட்சி பொது சுகாதாரம் இ, ஈ ஆகியப் பிரிவுகளில் உள்ள டம்பர் டம்பர் பின்கள் அனைத்தும் பழுதடைந்து குப்பைகள் சேகரம் செய்ய முடியாமல் பணிகள் பாதிப்படைவதால் இ, ஈ பிரிவுகளுக்கு தலா 10 எண்ணிக்கை வீதம் மொத்தம் 20 எண்ணிக்கை டம்பர் பின்கள் கொள்முதல் செய்ய ஏற்படும் உத்தேச செலவினம் `. 1300000/–ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : 1)** மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதியும், பொது சுகாதாரப் பணிகள் பாதிப்படையாமல் இருக்கவும், டம்பர் பின்கள் கூட்டுறவு நிறுவனமான சேலம் மாவட்ட சர்வோதயா சங்கம், தாண்டவராயபுரம், ஆத்தூர் நிறுவனத்திடம் நேரடியாக கொள்முதல் செய்யவும் அதற்கான தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/1076/18)

**தீர்மானம் எண். 322**

அனுமதிக்கப்பட்டது

( 12 ) இந்நகராட்சிக்குட்பட்ட 13 வார்டுகளிலுள்ள தெரு விளக்குகளை (1) 40 வாட்ஸ் குழல் விளக்குகள் 526 எண்ணிக்கை (2) சிஎப்எல் விளக்குகள் 484 எண்ணிக்கை (3) SVL விளக்குகள் 67 மொத்தம் 1077 எண்ணிக்கை ஒப்படைக்கும் காலம் முதல் 1 ஆண்டிற்கு இயக்கவும் மற்றும் பராமரிப்பு செய்யவும் தனியார் வசம் ஒப்படைக்க 23.5.2018 அன்று (3–ஆம் அழைப்பு) ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. மதிப்பீடு `. 990000/– பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் வருமாறு.

| வ. எண் | விலாசம் | மதிப்பீடு (`. லட்சத்தில்) | மதிப்பீட்டைவிட | |
|---|---|---|---|---|
| | | | குறைவு | அதிகம் |
| 1 | ஸ்ரீ குமரன் எலக்ட்ரிகல்ஸ்,<br>பழைய சூரமங்கலம், சேலம் | `. 9.90 | 0.03 % | – |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | அனு எலக்ட்ரிகல்ஸ், எல்லப்பா தெரு எண்.2, இராசிபுரம். | | – | 0.30 % |

பெறப்பட்ட 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.03 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ குமரன் எலக்ட்ரிகல்ஸ், சேலம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/285/18)

**தீர்மானம் எண். 323**

அனுமதிக்கப்பட்டது

( 13 ) இந்நகராட்சி தெரு விளக்குகளை பராமரிக்க தேவைப்படும் மின் உபகரணங்கள் சப்ளை செய்ய `. 3.00 லட்சம் மதிப்பீட்டிற்கு 23.5.2018 (3–ஆம் அழைப்பு) அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் வருமாறு.

| வ. எண் | விலாசம் | மதிப்பீடு (` . லட்சத்தில்) | தொகை |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ குமரன் எலக்ட்ரிகல்ஸ், 15/7, ஹரிகரன் இல்லம், பழைய சூரமங்கலம், சேலம் | `. 3.00 | `. 299900/- |
| 2 | அனு எலக்ட்ரிகல்ஸ், எல்லப்பா தெரு எண்.2, இராசிபுரம். | | `. 301490/- |

பெறப்பட்ட 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவாக `. 299900/- ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ குமரன் எலக்ட்ரிகல்ஸ், சேலம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/286/18)

**தீர்மானம் எண். 324**

அனுமதிக்கப்பட்டது

( 14 ) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையத்திற்குள் வரும் பேருந்துகளுக்கு கட்டணமாக `. 12/– துறை மூலமாக வசூல் செய்யப்பட்டு வருகிறது. தற்போது ரசீதுகள் 30.4.2018 முடியவுள்ள காலத்திற்கு மட்டுமே இருப்பு உள்ளது. 1.5.2018 முதல் 31.03.2019 வரையுள்ள காலத்திற்கு 80000 ரசீதுகள் அச்சடிக்க உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் மூன்று விலைப்புகள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| 1) சித்ரா பிரஸ், 92, பெரிய கடைவீதி, இராசிபுரம். | 100 எண்ணிக்கை ரசீது கொண்ட 1 புத்தகம் விலை | `. 22.50 |
| 2) சௌடேஸ்வரி பிரஸ், 24எ, மங்களம் ராமலிங்கம் தெரு, இராசிபுரம். | 100 எண்ணிக்கை ரசீது கொண்ட 1 புத்தகம் விலை | `. 24.50 |
| 3) விஜய் ஆப்செட் பிரிண்டர்ஸ், இராசிபுரம். | 100 எண்ணிக்கை ரசீது கொண்ட 1 புத்தகம் விலை | `. 25.00 |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண். 1–இல் காணும் சித்ரா பிரஸ், இராசிபுரம் வழங்கியுள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். பொது நிதியிலிருந்து செலவு செய்யலாம்.

(அ2/2709/17)

**தீர்மானம் எண். 325**

அனுமதிக்கப்பட்டது

(15) இந்நகராட்சி பொதுப் பிரிவில் அலுவலக உபயோகத்திற்கு பயன்படுத்தப்பட்டு வரும் SHARP Printer cum copier இயந்திரத்திற்கு தேவையான டோனர் வாங்க விலைப்புள்ளி கோரப்பட்டதில் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றது. அதன் விவரம் வருமாறு.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|
| 1 | Spyder Technology, Salem | 2 | `. 39800/– |
| 2 | Venus Tech, மெய்யனூர் மெயின் ரோடு, சேலம் | 2 | `. 40000/– |
| 3 | Raj Computers, சூரமங்கலம், சேலம் | 2 | `. 41000/– |

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய வ.எண். 1–இல் காணும் Spyder Technology நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : 1)** மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(பி3/637/18)

**தீர்மானம் எண். 326**

அனுமதிக்கப்பட்டது

(16) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 7, நெசவாளர் காலனியில் புதிய ஆழ்துளைக் கிணறு அமைத்து தண்ணீர் வசதி செய்யும் `. 4.00 லட்சம் மதிப்பீட்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிக்கு 23.05.2018–இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1)திரு ஆர். மாணிக்கம், ஒப்பந்ததாரர், 6எ, தட்டான்குட்டை ரோடு, இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.03% குறைவு.
2)திரு ஜே. ரவிச்சந்திரன், ஒப்பந்ததாரர், ஆர். கவுண்டம்பாளையம், இராசிபுரம் –மதிப்பீட்டைவிட 0.65% அதிகம்.

வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.03 % குறைவான திரு ஆர். மாணிக்கம் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மதிப்பீட்டினைவிட 0.03 % குறைவான திரு ஆர். மாணிக்கம் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/246/18)

**தீர்மானம் எண். 327**

அனுமதிக்கப்பட்டது

ஒம்/– ப. கிருஷ்ணமூர்த்தி,
தனி அலுவலர்,
இராசிபுரம் நகராட்சி

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.